
காந்தியப் பொருளாதாரம்

பேராசிரியர் மா. பா. குருசாமி



தமிழ்நாடு காந்தி நினைவுநிதி
மதுரை - 625020.

காந்தியப் பொருளாதாரம்

மா. பா. குருசாமி, எம். ஏ., டி. ஜி. டி.,

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
மதுரை - 625020

தமிழ்நாடு காந்தி நிதி வெளியீடு எண் : 168

பெயர்	:	காந்தியப் பொருளாதாரம்
பொருள்	:	பொருளாதாரம்
ஆசிரியர்	:	மா. பா. குருசாமி., எம். ஏ., டி. ஜி. டி.,
வெளியிட்டோர்	:	தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை - 20
அச்சிட்டோர்	:	வைகை அச்சகம், மதுரை - 1
பதிப்பு	:	முதற்பதிப்பு, மார்ச் '76
பிரதிகள்	:	1000
விலை	:	ரூ 1.75

Title	:	Gandhiya Porulatharam
Subject	:	Economics
Author	:	M. P. Gurusamy, M. A., D. G. T.,
Publishers	:	Tamilnad Gandhi Smarak Nidhi, Madurai - 20
Printers	:	Vaigai Achagam, Madurai - 1
Edition	:	First Edition, March '76
Copies	:	1000
Price	:	Rs. 1.75

பதிப்புரை

இந்தியா சுதந்திரம் பெற்று 27 ஆண்டுகளாகின்றன. தற்போதய பொருளாதார அமைப்பு சுமார் 70 சதவிகிதம் மக்களை வறுமைக் கோட்டிற்கும் கீழ்நிலையில் கொண்டு சென்றிருக்கிறது. பணவீக்கம், பணவாட்டம், லஞ்சம், கலப்படம், கள்ளச்சந்தை, சுரண்டல் அத்தனையும் சமூகத்தின் பெரும் தீராத நோய்களாகப் பரவியிருக்கின்றன. இவற்றை அடியோடு களைவதற்கு நமது இந்திய அரசாங்கம் பெருமுயற்சிகள் செய்து கொண்டிருக்கிறது.

பாரதநாடெங்கும் இன்று வறுமை ஒழிப்புப் பற்றி ஒரே மூச்சாகப் பேசப்படுகின்றது. பல கருத்தரங்குகள் நடைபெறுகின்றன. ரேடியோ, டெலிவிஷன் மூலம் இடைவிடாது பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன. மகாத்மா காந்தியடிகள் எழுதிய இந்திய சுயராஜ்யம் என்ற நூலிலேயே அவருடைய ஆழமான பொருளாதாரக் கருத்துக்களின் கருவூலங்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. மனித வாழ்வை மையமாகக் கொண்ட பொருளாதார அமைப்பையே காந்தியடிகள் அழுத்தமாக வலியுறுத்துகிறார். தனிப்பட்ட மனிதன் மட்டுமின்றி மனிதகுலம் பூராவும் மேன்மையுற வேண்டுமென்பதே அவரது கனவும் நனவும்.

அமரர் காந்தியடிகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர். வாழ்க்கையை முறையாக முழுமையாக வாழ்ந்து அறிந்தவர்; அவர் ஒரு சமுதாய விஞ்ஞானி; அருளையும் பொருளையும் இணைத்துச் சிந்தித்தவர்; சமுதாயப் பெருநோயைப் பற்றித் தீர்க்கமாக அறிந்தவர். இன்றைய சமுதாயப் பிணிகள் தீர அவர் வாழ்ந்த வாழ்க்கை

முறையும், அவரது குறிக்கோள்களும், அறக்கருத்துக்களுமே சஞ்சீவியாகும். அது மனிதனைப் புறக்கணிக்காது. அது அவனது ஆக்கத் திறனை உயர்த்தும்.

மனித சமுதாயத்திற்குத் துணை செய்கின்ற நிலையான, இயற்கையோடு இணைந்து செல்கின்ற மிகச் சிறப்பானதொரு தாய்மைப் பொருளாதார அமைப்பு முறையை உருவாக்க வேண்டுமென அவர் தீர்க்கமாக உணர்த்தியிருக்கின்றார். அது உணர்ந்து தெளிந்து செயல்பட வேண்டிய தத்துவம்; தூய சிந்தனைகளின் மூலம் அது செயலாக மலர வேண்டும். மனிதனின் ஆன்மாவை விழிப்படையச் செய்ய வேண்டுமென்பதே அவரது பொருளாதார சிந்தனை. காந்தியடிகள் காட்டிய வழியை நாம் மறந்ததாலேயே இன்று பிரச்சனைகள் அதிகமாகி விட்டன.

'எனது வாழ்வே எனது செய்தி' என்று அறிவித்த மகான் அவர். எளிய வாழ்வும், உயர்ந்த சிந்தனையுமே அவர் போற்றிய உயரிய வாழ்க்கை முறைகளாகும். பேராசிரியர் திரு. மா. பா. குருசாமி அவர்கள் எழுதிய இச்சிறு நூல் காந்தியடிகளுடைய பொருளாதாரக் கருத்துக்களைப் படம் பிடித்துச் சித்தரிக்கின்றது. படித்த ஒவ்வொரு தமிழ் மகனும் இப்பொருளாதாரத்தின் அடிப்படைகளை நன்கு அறிந்து சிந்திக்க வேண்டுமென்ற பெரு நோக்கத்துடனேயே தமிழ்நாடு காந்தி நினைவு நிதி இச்சிறு நூலை மகிழ்வுடன் பிரசுரிக்கின்றது.

மதுரை 625020

3—3—1976

ச. அழகர்சாமி
செயலாளர்
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி

பொருளடக்கம்

	பின் புலம்	1
1.	காந்தியப் பொருளாதாரத்தின் இயல்பும் பரப்பும்	4
2.	நுகர்வு (Consumption)	10
3.	உற்பத்தி	17
4.	பொருட்களின் மதிப்பும் மாற்றும்	30
5.	பகிர்வு (Distribution)	34
6.	அரசும் பொருளாதாரமும்	40
7.	கல்வியும் பொருளாதாரமும்	42
	நிறைவு	44
	துணை நூல்கள்	45

பின்புலம்

இன்றும் என்றும் வளர்ந்து கொண்டிருக்கின்ற ஓர் உயிரோட்டமுள்ள தத்துவமாகக் காந்தியம் திகழ்கின்றது. காந்தியடிகள் என்ற தனிமனிதரோடு தொடங்கி முடிவதல்ல காந்தியம். காந்தியடிகள் ஒரு புதிய—சர்வோதய—சமுதாயத்திற்கான அடிப்படையை அமைத்துக் கொடுத்தார். அந்தச் சமுதாயக் கோபுரம் காலச் சூழலுக்கேற்ப வளரத் தக்க வகையில், அதனைக் கட்டுகின்றவர்கள் பின்பற்ற வேண்டிய கொள்கைகளை மட்டும் வரையறுத்து விட்டு, நடைமுறையைப் பின் வருகின்றவர்களிடம் விட்டுச் சென்றிருக்கின்றார்.

பொருளியலைக் கல்லூரியில் படித்து, பட்டம் பெற்று, பொருளியல் கலைச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுகின்றவர்தான் பொருளியலறிஞர் என்று கூறினால், காந்தியடிகள் ஒரு பொருளியல் அறிஞர் அல்லர். பொருளாதாரத்தை மற்றைய இயல்களிலிருந்து தனித்துப் பிரித்துப் பார்க்கும் கண்ணோட்டம் காந்தியடிகளிடம் இல்லை.

காந்தியடிகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர். மற்றவர்களும் முறைப்படி வாழ எண்ணியவர். வாழ்க்கையை அரசியல், சமுதாயம், பொருளாதாரம், சமயம் என்று பாகுபடுத்திக் கொள்ளாததால் வாழ்க்கையை முழுமையாகக் கண்டவர். ஆதலால் அவரது பொருளாதாரம் தனிமரமாக வளர்க்கப் பெறவில்லை.

சமுதாயச் சோலையில் அதற்கு உரிய இடத்தைக் கொடுத்திருக்கின்றார்.

காந்தியடிகளின் பொருளியலை அவரது வாழ்க்கையின் பின்புலத்தில்தான் நன்கு, முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும். அவர் வாழ்ந்த வாழ்க்கையையும், அவரது இலட்சியங்களையும் மறந்து விட்டு, அவரது கருத்துக்களை மட்டும் தனியாகப் பார்ப்பவர்கள் அவை நடைமுறைக்குப் பொருந்தாதவை என்று கூறுவதில் வியப்பில்லை. ஒரு தோப்பிலிருந்து கொண்டு வந்த ஒரு மரக்கிளையை வைத்துக் கொண்டு தோப்பைப் பற்றிக் கணித்து மதிப்பிடும் முயற்சி பயனளிக்காது.

காந்தியடிகளின் "சத்திய சோதனையையும்", அவரது வாழ்க்கையைப் பற்றி மற்றவர்கள் எழுதிய நூல்களையும் படித்தால், அவர் மற்றைய துறைகளைப் போன்றே பொருளாதாரத் துறையிலும் செய்து பார்த்த சோதனைகள் விளங்கும். அவர் பொருளாதார நூற்களையே படிக்காதவரல்லர். ஆர். சி. டட்டின் "இந்தியப் பொருளாதார வரலாறு" (Economic History of India (2 Volumes") by R. C. Dutt) நூலைப் படித்துவிட்டு, அதில் பாரதம் வறுமையின் பிடியில் வாடுவதை - ஆசிரியர் கூறுவதை உணர்ந்து கண்ணீர் விட்டவர். கைக்குக் கிடைத்த பொருளாதார நூற்களை எல்லாம் படித்தவர். அவரது முதல் கொள்கை விளக்க நூலான "ஹிந்து சுயராஜ்யம்" (Hind Swaraj) என்ற நூலிலேயே அவரது பொருளாதாரக் கருத்துக்களின் ஆக்கமளிக்கும் விதைகளைக் காணமுடிகின்றது.

அண்ணல் ஒரு சமுதாய அறிவியலறிஞர். ஆன்மாவின் விழிப்புணர்ச்சி பெற்றவர். மனித குலம் தோன்றிய

காலத்திலிருந்து இன்றுவரை தலைதூக்கிய அறக் கருத்துக் களில் என்றும் நமக்குப் பயன்படத்தக்கவற்றை எடுத்துக் கொள்கின்ற இதயம் கொண்டவர். முத்துக் குளிப்பவர் கள் கடலின் ஆழத்திற்குள் சென்று சிப்பிகளை அள்ளி வருவார்கள். அவற்றில் தேடி முத்துக்களைப் பொறுக்கித் தருவார்கள். அதே போன்று பழங்காலக் கடலின் ஆழத்திலிருந்து எடுத்து வந்த முத்துக்களுக்கு இற்றைக் கால ஒளியேற்றிக் கொடுத்தவர் காந்தியடிகள். அதே நேரத்தில் வருகின்ற புதுமைகளிலும் சமுதாயத்திற்கு நன்மை தரத்தக்கவற்றை ஏற்று, நமது சூழலுக்கேற்ப மாற்றிப் பயன்படுத்தியவர்.

அவர் கற்ற பொருளியல் நூற்கள் மட்டுமின்றி சமய நூற்களின் சாரத்தையும், ரஸ்கின், டால்ஸ்டாய் போன்று அவர் போற்றிய அறிஞர்களின் கருத்துக்களின் ஊட்டத்தையும், அவர் நடைமுறை வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கற்றவற்றின் அடிப்படையில் தோன்றிய சிந்தனை களையும் கொண்டவைகளாகக் காந்தியடிகளின் பொருளா தாரக் கருத்துக்கள் உள்ளன.

அண்ணலின் வாழ்வில் சிந்தனை, பேச்சு, செயல் ஆகியவற்றிற்கிடையில் வேறுபாடு இல்லை. அதே போன்று அவர் வாழ்ந்த வாழ்விற்கும் உருவாக்கிய தத்துவங் களுக்கும் இடையில் முரண்பாடோ, இடைவெளியோ இல்லை. அவரது வாழ்க்கையின் பின்புலத்தில் அவரது பொருளாதாரத்தைக் காண்பது தான் சரியானதாகும்.

1
காந்தியப் பொருளாதாரத்தின் இயல்பும் பரப்பும்

மேற்கத்தியப் பொருளாதாரத்தைப் படித்தவர்களுக்கு மேற்போக்காகப் பார்த்தாலே காந்தியப் பொருளாதாரம் அதிலிருந்து மாறுபட்டிருப்பது தெரியும். பெரும்பாலும் மேலே நாட்டு அறிஞர்கள் பொருளாதாரத்தைத் தனி இயலாக வளர்க்கத் தொடங்கிய பிறகு, தங்களுக்கென்று ஒரு வரையறையை — வரம்பை — எல்லையை அமைத்துக் கொண்டு, அந்த வட்டத்திற்குள் வருகின்ற மனித நடவடிக்கைகளை ஆய்கின்றனர்.

ஆடம்ஸ்மித், நாடுகளின் செல்வ வளர்ச்சியை, அதற்கான மூலங்களை, செயல்களை, விளைவுகளைப் பற்றி ஆராய்வதுதான் பொருளாதாரத்தின் பணி என்று கருதினார். ஆனால் ரஸ்கின், கார்லைல் போன்றவர்கள் இந்த அணுகு முறையைச் சாடியதால் செல்வத்தோடு கூட மனித நலனையும் பற்றிப் பயில்வதுதான் பொருளாதாரம் என்ற இலக்கணத்தை ஆல்பிரட் மார்ஷல் உருவாக்கிக் கொடுத்தார். மனித நலக் கருத்தில் குறை கண்ட லயனல் ராபின்ஸ், 1 மனித விருப்பங்கள் எண்ணற்றவை; 2 ஆனால் அவற்றை அடைவதற்குரிய சாதனங்கள் அளவோடு இருக்கின்றன; 3 அளவாக

இருக்கின்ற சாதனங்களை ஏதாவது விருப்பங்களை நிறைவு செய்ய மாற்றிப் பயன்படுத்தலாம்; 4 எந்த விருப்பங்களை முதலில் நிறைவு செய்வதென்பதைத் தீர்மானிக்க வேண்டும்—என்கின்ற நான்கு கருத்துக்களின் அடிப் படையில் பொருளாதார இயல் அமைகின்றதென்று கூறுகின்றார். வேறு வகையில் சொன்னால், நமக்கு வேண்டிய பொருட்கள் பற்றாக்குறையாக — கிடைப் பருமையாக (Scarcity) இருப்பதால்தான் பொருளா தாரம் தனி இயலாக இருக்கின்றதென்பது அவரது கருத்து. அறக்கோட்பாடுகளுக்குப் பொருளாதாரத்தில் இடமில்லை என்ற முடிவோடு லயனல் ராபின்ஸ் பொருளி யலுக்கு விளக்கம் கூறுகின்றார். இதனைப் பின்பற்றியே மேற்கத்தியப் பொருளியல் சிந்தனை, வளர்ச்சி பெற்றிருக் கின்றது. Lionel Robins: There is no place for ethical rules in eco.

காந்தியப் பொருளாதாரத்தின் உயிர்நாடியாக அறம் விளங்குகின்றது. அகிம்சையும் சத்தியமும் காந்தியத்தின் இரு கண்கள். இவற்றைப் பொருளியல் துறையிலும் புறக்கணிக்க இயலாது. வன்முறையை வளர்க்கின்ற, வன்முறைக்கு இடம் தருகின்ற பொருளாதார அமைப்பு முறையை, நடவடிக்கைகளைக் காந்தியடிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. சத்தியத்திலிருந்து விலகிச் செல்கின்ற எதுவும் மனித குலத்திற்கு நிலையான நன்மையை விளைவிக்காது என்பதைக் காந்தியடிகள் வலியுறுத்திக் கூறுகின்றார். ethics

காந்தியடிகள் 1921 ஆம் ஆண்டிலேயே "ஒழுக்க மதிப்புக்களைப் புறக்கணிக்கின்ற, மதிக்காத பொருளா தாரம் பொய்மையானதாகவே இருக்கும்", (Young India 13-10-1921) என்று கூறினார். அவர் தனது "சத்திய

சோதனை"யில், "தனி மனித ஒழுக்க நலனையோ, நாட்டின் ஒழுக்க நலனையோ கெடுக்கின்ற பொருளாதாரம் ஒழுங்கற்றதாகவே இருக்கும். ஆகையால் அது பாவமானதாக இருக்கும்", என்று கூறுகின்றார்.

காந்தியடிகள் பொருளியலில் அறக்கருத்துக்களை மிகுதியும் வலியுறுத்தியதற்குக் காரணம் உண்டு. தொழிற் புரட்சிக்குப் பின்னால் பொருளியல் சிந்தனையின் செல்வாக்கு மிகுந்தது. வழிமுறைகளையும், மனித குலத்தைப் பாதிக்கின்ற விளைவுகளையும் பற்றிக் கவலைப் படாமல், செல்வத்தைத் தேடிக்குவிப்பதிலேயே கவனம் செலுத்துகின்ற போக்கு தனிமனித வாழ்விலும் பொது வாழ்விலும் தலைதூக்கி விட்டது.

எந்திரங்களைக் கண்டுபிடித்ததும், தொழிற்சாலைகளின் வளர்ச்சியும், மக்களின் தேவைகளைப் பற்றிக் கவலைப் படாமல் இலாப நோக்கில் பெருகிய உற்பத்தியும், சந்தைகளைப் பிடிக்க ஏற்பட்ட போர்களும், நாடுகளை அடிமைப் படுத்திய கொடுமையும், மனிதர்களை மனிதர்கள் சுரண்டும் போக்கும், வளமும் வறுமையும் வளர்ந்த விதமும், பொருளாதார நடவடிக்கைகளை இயக்கிய தந்நல நோக்கமும், இவை போன்ற பிறவும் பொருளாதாரத்தின் கூறுகளாக இருப்பதனைக் காந்தியடிகள் உணர்ந்தார். மனிதனுக்குத் துணை செய்ய வேண்டிய பொருளாதாரம், மனிதனை மூச்சு முட்டித் திக்கு முக்காடச் செய்கின்ற நிலையினை அறிந்தார். இதற்கெல்லாம் காரணம் பொருளியல் ஓர் அறிவியலென்ற எண்ணத்தில் அறவியலை விட்டு விலகிச் சென்றதுதான் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டார். இன்றையப் பொருளாதார நடவடிக்கைகள் மனிதனின் ஆன்மாவை அழிக்

கின்ற வகையில் இருப்பதனைச் சுட்டிக் காட்டுவதைத் தமது கடமையாகக் கருதினார்.

''நான் பொருளியலுக்கும் அறவியலுக்கும் இடையில் எந்தப் பிரிவினையையும் வேறுபாட்டையும் வகுத்துக் கொள்ளவில்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்,'' என்றும், ''உண்மையான பொருளாதாரம் எப்பொழுதும் உயர்ந்த அறநிலைக்கு எதிராக இருக்காது. அதேபோல, உண்மையான எல்லா அறங்களும் அவற்றின் பெயருக் கேற்ப இருக்க வேண்டுமென்றால் அவை நல்ல பொருளிய லாகவே இருக்கும். பொருள் வழிபாட்டை வளர்க்கின்ற, எளியவர்களை வாட்டி வலியவர்கள் செல்வத்தைக் குவிக்க வழிவகுக்கின்ற பொருளாதாரம் பொய்மையானதாகவும், தாழ்வுற்ற அறிவியலாகவும் இருக்கும் அத்தகைய பொருளாதாரம் அழிவுக்கு வழிவகுக்கின்றது. உண்மை யான பொருளாதாரம் சமுதாய நீதிக்காக நிற்கும். வலிமையற்றவர்களையும் சேர்த்து எல்லோருடைய நன்மையையும் சமமாக வளர்க்கும். மதிப்பான வாழ்விற்கு அது இன்றியமையாததாக இருக்கும்'', என்றும் காந்தி யடிகள் கூறுகின்றார். இவற்றிலிருந்து அண்ணல் பொருளியலைப் பற்றி என்ன கருதுகின்றாரென்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

மனித வாழ்க்கையின் நோக்கம் உயர்ந்தது; மகத் தானது. வெறும் கலக மானிடப் பூச்சிகளாக உண்டு, வாழ்ந்து, மடிவதில் பயனில்லை. மனிதன் தன்னையறிந்து, இறைவனை உணரப் பொருளாதார வாழ்வும் துணை செய்ய வேண்டும். ஆதலால், மனிதனை மையமாகக் கொண்ட, மனிதனின் வாழ்விற்கு முக்கியத்துவம் தருகின்ற பொருளாதாரத்தைக் காந்தியடிகள் வலியுறுத்துகின்றார்.

காந்தியடிகள் மனித சமுதாயத்திற்குத் துணை செய்கின்ற ஒரு "நிலையான பொருளாதாரத்தை" (Economy of Permanence) உருவாக்க முயன்றார். இயற்கையோடு இணைந்து செல்கின்ற பொருளாதார அமைப்பு முறையை உருவாக்க வேண்டியது இன்றையக் காலத் தேவையென்பதை அறிந்து உணர்த்துகின்றார்.

காந்தியப் பொருளாதாரத்தை மேற்போக்காகப் பார்க்கின்றவர்களில் சிலர் இதனை பழமையான, பிற்போக்கான பொருளாதாரச் சிந்தனையாகக் கருதுகின்றனர். உண்மையில் காந்தியப் பொருளாதாரம் புரட்சிகரமானதாகவும் புதுமையானதாகவும் இருப்பதனை ஆழ்ந்து நோக்குபவர்கள் புரிந்து கொள்வார்கள்.

காந்தியப் பொருளாதாரத்தின் பரப்பு மிகவும் விரிந்தது. அது தனி மனிதனில் தொடங்கி குடும்பம், சமுதாயம், நாடு, உலகம் என்று விரிந்து செல்லக் கூடியது. உள்நாட்டிற்கென்று ஒரு பொருளாதாரக் கொள்கையையும், வெளிநாட்டிற்கென்று மற்றொன்றையும் கடைப்பிடித்தலைக் காந்தியம் விரும்பவில்லை.

"காந்தியடிகள் சிக்கலின் அறக் கூறுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்ற உண்மையை நாம் உணர்கின்ற பொழுது காந்தியடிகளின் பொருளாதாரத் தத்துவம் கூடிய சிறப்பினைப் பெறுகின்றது." என்று பட்டாச்சார்யா என்ற பொருளியலறிஞர் கூறுகின்றார்.

காந்தியடிகள், ஆடம்ஸ்மித், மார்ஷல், மார்க்ஸ் போன்று தமது பொருளியல் கருத்துக்களை எல்லாம் விளக்கி ஒரு தனி நூல் எழுதவில்லை. ஆனால் அவரது

"ஹிந்து சுயராஜ்யம்" முதல் அவர் எழுதிய எல்லா எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் பொருளியல் கருத்துக்கள் பரவலாகக் கிடைக்கின்றன. அவற்றை யெல்லாம் தொகுக்கின்ற பொழுது காந்தியப் பொருளா தாரம் முழு உருப் பெறுவதனைக் காணலாம்.

2

நுகர்வு (CONSUMPTION)

பொருளாதார நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக—தூண்டுதலாக — இருப்பது மனிதனுக்குரிய பொருட் தேவைகள். பொருட்களைப் பெற விருப்பமும், அவற்றைப் பெற எடுத்துக் கொள்கின்ற முயற்சியும், அவை கிடைத்து நுகர்கின்ற பொழுது கிடைக்கின்ற மன நிறைவும், ஒரு விருப்பம் நிறைவேறியவுடன் அடுத்த விருப்பத்தை நிறைவேற்ற மேற்கொள்ளும் முயற்சியும் —இப்படியே தொடர் சங்கிலியாகச் செல்கின்ற மனித நடவடிக்கைகள் பொருளாதாரச் செயல்களாக உருவாகின்றன.

மனிதன் பொருட்களை நுகர வேண்டிய தேவை இல்லையென்றால் பொருட்களின் உற்பத்தி, மாற்று, பகிர்வு, அவை தொடர்பான மனித உறவுகள் ஆகியவை தோன்றப் போவதில்லை. ஆனால் மண்ணுலகில் வாழ, மனிதனுக்குப் பொருட்கள் தேவை. ஆதலால் பொருட்களின் நுகர்வை ஒட்டித் தொடர்ந்து வருகின்ற உற்பத்தி, மாற்று, பகிர்வு ஆகியவை பற்றி எந்தப் பொருளாதார அமைப்பிலும் தீர்மானிக்க வேண்டியதிருக்கின்றது.

மனிதன் பொருட்களை நுகர்வதற்குக் காரணம் அவற்றிலிருக்கும் பயன்பாடு. மேற்கத்தியப் பொருளாதாரம் பயன் (Use) வேறு, பயன்பாடு (Utility) வேறு

எனப்பிரித்து, பயன்பாட்டைப் பற்றியே ஆய்கின்றது. பயன்பாடு என்பது மனித விருப்பத்தை நிறைவேற்று கின்ற பொருளிலுள்ள ஆற்றல். இத்தகைய ஆய்வு முறையில் மனித விருப்பம் நல்லதா, கெட்டதா என்றோ, பயன்பாடு பயனுள்ள—நன்மை தருகின்ற பயன்பாடா, கெடுதல் விளைவிக்கக் கூடியதா என்றோ எண்ணிப் பார்ப்பதில்லை. பொருளாதாரக் கண்ணோட்டத்தில் மதுவும், பாலும்—அவற்றை விரும்பிக் குடிப்பவர் களுக்குப் பயன்பாட்டைத் தருவதால்—இரண்டும் ஒன்று தான். நுகர்வை ஒட்டி மனிதனின் வாழ்க்கைத்தரம் உயர்வதாகக் கருதுகின்றனர். ஆதலால் பொருட்களின் தேவைப் (நுகர்வு) பெருக்கம் மேற்கத்தியப் பொருளா தார வளர்ச்சியின் மையமாக விளங்குகின்றது. நுகர்வைப் பெருக்க விளம்பரங்கள் போன்ற வழிமுறைகளைப் பின் பற்றுகின்றனர்.

காந்தியடிகள் நுகர்வுக்குரிய இடத்தை மறுக்கவோ, மறக்கவோ இல்லை. "பசிக்கின்றவனுக்கு முன்னால் இறைவன் ரொட்டித் துண்டின் உருவத்தில்தான் காட்சி யளிக்க முடியும்," 'என்று கூறுவதிலிருந்தே, மனிதனின் பொருட்தேவையை அவர் உணர்ந்திருந்ததை நாம் தெரிநது கொள்ளலாம்.

மனிதனின் வளர்ச்சிக்குத் துணைசெய்கின்ற வகையில் பொருட்களின் நுகர்வு அமைய வேண்டும். பொருட்களை நுகர்வதற்காகவே மனிதன் வாழக்கூடாது. நுகரும் பொருட்கள் மனிதனின் தேவையை ஒட்டி அமைய வேண்டும்.

மேற்கத்தியப் பொருளாதாரச் சிந்தனையாளர்கள் நுகர்வுக்கு ஓர் அளவு (கட்டுப்பாடு) இருக்க வேண்டு

மென்று எண்ணவில்லை. மாறாக, நுகர்வுப் பெருக்கத்தை வலியுறுத்துகின்றனர். அவர்களது ஆய்வுப்படி, நுகர்வின் அளவு கூடக் கூட, பொருட்களின் தேவை கூடும். தேவையின் வளர்ச்சி உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி கோலும். உற்பத்தி மிகுகின்ற பொழுது நாட்டின் செல்வமும், மக்களின் வருவாயும் வாழ்க்கைத் தரமும் உயரும்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை (Standard of Living) அவர்கள் நுகர்கின்ற பொருட்களின் அளவு நிர்ணயிப்பதாகக் கருதுகின்றனர். ஆதலால் தேவைப் பொருட்களைப் பயன்படுத்துவதோடு கூட, வசதிப் பொருட்களையும் ஆடம்பரப் பொருட்களையும் மேலும் மேலும் பயன்படுத்த பயன்படுத்த— புற வாழ்க்கை வசதியாக அமைய அமைய— வாழ்க்கைத்தரம் உயர்வதாக எண்ணுகின்றனர். இந்தச் சிந்தனைப் போக்கில், மக்களின் அகவாழ்வை—வாழ்க்கையின் நோக்கங்களையும், மதிப்பீடுகளையும் — ஒட்டி அமைகின்ற "வாழ்வியல் தரத்தைப்" (Standard of Life) பற்றிய எண்ணத்திற்கு இடமில்லை.

காந்தியடிகள் வாழ்வியல் தரத்தின் அடிப்படையில் தான் மக்களின் வாழ்க்கைத்தரத்தை நோக்குகின்றார். மனிதனின் முயற்சிகளும், செயல்களும் அவனை உயர்த்துவதாக இருக்க வேண்டும். மனிதனைத் தெய்வமாக்க வேண்டுமென்பது சமயத்தின் குறிக்கோள். மனிதனை மிருகமாக மாற்றுகின்ற எதையும் காந்தியடிகள் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை.

"உயர்ந்த சிந்தனையும் எளிய வாழ்க்கையும்", அவர் போற்றிய வாழ்க்கை முறையாகும். அளவு கடந்த

பொருட்களின் நுகர்வு மனிதனைப் போகியாக மாற்றுகின்றது. நுகர, நுகர, மேலும் நுகர வேண்டுமென்ற ஆசையே வளர்கின்றது. "போதுமென்ற மனம்," இல்லாத போது வாழ்க்கையில் அமைதி இருப்பதில்லை.

இன்றையப் போலி நாகரிகம் நுகர்வின் அளவில் அடங்கியிருக்கின்றது. காந்தியடிகள், "நாகரிகம் என்பது அதன் உண்மையான பொருளில், தேவைகளைப் பெருக்குவதில் அல்ல; நாமே எண்ணிப் பார்த்து விரும்பி தேவைகளைக் குறைப்பதில் இருக்கின்றது," என்று கூறுகின்றார்.

தேவைகளைக் குறைத்துக் கொள்கின்ற — எளிமையான — வாழ்க்கையைக் காந்தியடிகள் வலியுறுத்துவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

முதலாவதாக, பொருட்களின் தேவைகளைப் பெருக்கிக் கொண்டு செல்கின்ற மனிதன் அவனது ஆன்மாவை மறந்து விடுகின்றான்; காலப்போக்கில் இழந்து விடுகின்றான். உடலைப் பற்றிய கவலை அவனைக் குறுகிய தன்னல வட்டத்திற்குள் சுழலச் செய்கின்றது.

இரண்டாவதாக, நுகர்வைப் பெருக்கிக் கொண்டே செல்கின்ற மனிதன் அந்த அளவிற்குத் தனது வருவாயையும் பெருக்க முயல்கின்றான். சரியான வழியில் வருவாயை உயர்த்த இயலாத பொழுது அறத்திற்குப் புறம்பான வழியிலும் வருவாயைத் தேட முயல்கின்றான். வழிமுறையைப் பற்றிக் கவலைப்படாத மனநிலை வளர்கின்றது. சமுதாயத்தில் இலஞ்சம், கலப்படம் போன்ற சீர்கேடுகளுக்கு இத்தகைய மனப்போக்குக் காரணமாயிருக்கின்றது.

மூன்றாவதாக, மக்களிடமுள்ள ஏற்றத்தாழ்வு வெளிப்படுவது நுகர்வில்தான். போட்டியும், பொறாமையும் வெறுப்பும் வளரச் சிலரது பகட்டான வாழ்க்கை காரணமாக இருக்கின்றது. மக்கள், இருப்பவர்—இல்லாதவர் என்று பிளவுபட நுகர்வு காரணமாகின்றது.

நான்காவதாக, நுகர்வில் கட்டுப்பாடு இல்லாத பொழுது தேவைக்கு மேலேயே சேர்த்து வைக்கின்ற போக்கு வளர்கின்றது. காந்தியடிகள், "ஒவ்வொருவரும் தமக்குத் தேவையானவற்றை மட்டுமே வைத்துக் கொள்வதென்றிருந்தால் எவரும் இல்லாமை காரணமாக வருந்த மாட்டார்கள்; எல்லோரும் இன்புற்றிருப்பார்கள்," என்றும், "நாம் ஒரு வகையில் திருடர்களேயென்று சொல்லுவேன். எனக்கு இப்பொழுது தேவையில்லாத ஒன்றை நான் வைத்துக் கொள்வேனாயின் அதை நான் இன்னொருவரிடமிருந்து திருடிக் கொண்டேனென்றே ஆகும்," என்றும் கூறியிருப்பவை எண்ணிப்பார்க்கத் தக்கன.

இன்றையப் பொருளாதாரத்தில், நுகர்வோர் தாம் குறைந்த விலை கொடுத்து மிகுதியான பயன்பாட்டைப் பெற முயல்கின்றாரென்ற கருத்தின் அடிப்படையில் கோட்பாடுகளை உருவாக்குகின்றனர். நுகர்பவர் தன்னையும் தனக்குக் கிடைக்கும் பயன்பாட்டையும் பற்றிக் கருதினால் மட்டும் போதாது, நுகர்வின் விளைவுகளையும் பற்றிய உணர்வு வேண்டுமென்று காந்தியப் பொருளாதாரம் கூறுகின்றது.

டாக்டர் ஜே. சி. குமரப்பா நுகர்வோருக்கு ஒரு தலையாய கடமை உண்டென்பதை வலியுறுத்துகின்றார்.

ஒரு பொருளுக்கு விலையாகத் தாம் கொடுக்கின்ற பணம் யாருக்குச் செல்கின்றதென்ற தெளிவு வேண்டும். ஏனென்றால் நுகர்வுக்கும் சமுதாய அமைப்பிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. எடுத்துக்காட்டாக, கதருக்கு ஒருவன் கொடுக்கின்ற பணத்தில் பெரும்பகுதி ஏழைத் தொழிலாளிகளுக்குச் செல்கின்றது. ஆலைத் துணிக்குக் கொடுக்கின்ற பணத்தில் பெரும்பங்கு முதலாளிக்குப் போகின்றது.

நுகர்வோர்களிடம் சமுதாய உணர்வு வேண்டும். எல்லோருக்கும் தாராளமாகக் கிடைக்கின்ற பொருட்களையே பயன்படுத்துவதென மக்கள் முடிவு செய்து விட்டால் "கறுப்புச் சந்தை" (Black Market) தோன்ற வழி இருக்காது. இதனைச் சட்டத்தின் மூலம் செயல்படுத்த இயலாது. ஆனால் இத்தகைய ஒரு சுயகட்டுப்பாடு இல்லாமல் சமநிலைச் சமுதாயத்தை அமைக்க இயலாது.

இப்பொழுது, நுகர்வைப் பெருக்கப் பல வழிகளில் மக்களைத் தூண்டுகின்றனர். தவணை முறையில் பொருட்களை விற்கின்றனர். மக்கள் தங்களது வருங்கால வருவாயை இன்றைய நலத்திற்காகச் செலவிடுகின்றனர். இதனால் அவர்களது எதிர்காலச் சந்ததியின் நல்வாழ்வு பாதிக்கப்படுவதைப் பற்றி அவர்கள் எண்ணிப்பார்ப்பதில்லை. "மனித மனம் அமைதியற்ற பறவை போன்றது. மிகுதியாகக் கிடைத்தால் மேலும் மிகுதியாகக் கேட்கின்றது. இன்னும் அது நிறைவு பெறாமல் இருக்கின்றது", என்று காந்தியடிகள் கூறுகின்றார்.

எதையும் பயன்படுத்துவது நுகர்வாகாது. மனித நலனுக்கு ஆக்கந்தரத் தக்கவற்றை மட்டும் பயன்

படுத்துவதுதான் அறிவுடைய நுகர்வாக இருக்க முடியும். மது, புகையிலை போன்று மனித நலனுக்குக் கேடு விளைவிக்கின்றவற்றைச் சமுதாயமாகவே புறக்கணிக்கின்ற வளர்ச்சி ஏற்பட வேண்டும். அப்பொழுதான் நுகர்வின் அளவு கூடுவதற்கேற்ப மக்களின் நலமும் கூடிக் கொண்டே வரும்.

சமுதாயத்தில் சிலருக்கு மட்டும் வேண்டியன எல்லாம் வேண்டிய அளவில் கிடைப்பதும், வேறுபலர் வறுமையில் வாடுவதும் சமுதாய வளர்ச்சிக்கு ஏற்றதல்ல. இப்பொழுது நமது நாட்டில் சிலரின் தேவைக்காக வெளி நாட்டிலிருந்து மிக விலையுயர்ந்த பொருட்களை இறக்குமதி செய்கின்ற நிலை இருக்கின்றது. இத்தகைய நுகர்வுகளைத் தடுத்து நிறுத்துவது தேவையாகும்.

எல்லா மக்களின் நுகர்வுக்கும் இன்றியமையாத பொருட்கள் கிடைத்த பிறகுதான் வசதிப் பொருட்களைப் பற்றியே எண்ண வேண்டும். எல்லா மக்களின் அடிப்படைத் தேவைகளையும் நிறைவு செய்கின்ற பொறுப்பைச் சமுதாயம் ஏற்க வேண்டும். நுகர்வை முழுக்கச் சட்டத்தின் மூலமாக நெறிப்படுத்த முடியாது. மக்களிடம் அற-சமுதாய உணர்வுகளை வளர்ப்பதன் மூலமாகத்தான் இதனைச் செய்ய முடியும்.

3
உற்பத்தி

இன்றைய நிலை: மேலை நாட்டுப் பொருளியல் சிந்தனையாளர்கள் இன்று முதலாளித்துவ அமைப்பு முறையில் எப்படி உற்பத்தி நடைபெறுகின்றதென்பதை ஆராய்ந்து உற்பத்திக் கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர். இன்றைய உற்பத்தியின் நோக்கம் இலாபம். அமைப்பாளர் (Organiser) அல்லது தொழில் முயல்வோர் (Entrepreneur) தமது ஆற்றல்களைப் பயன்படுத்தி உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, முதல் ஆகியவற்றை இணைத்து, உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, எவற்றிற்குத் தேவை இருக்கும் அல்லது எவற்றை உருவாக்கலாம் என்பதை ஊகித்து, எவற்றை உற்பத்தி செய்தால் அதிக இலாபம் இருக்குமோ அவற்றை உற்பத்தி செய்கின்றனர்.

இலாப நோக்கில் உற்பத்தியை மேற்கொள்கின்ற பொழுது சமுதாயத் தேவையைப் பற்றிய உணர்வோ, மக்கள் நலம் பற்றிய கவனமோ இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, மது, போர்க்கருவிகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதைக் கூறலாம்.

மிகுதியாக உற்பத்தி செய்கின்ற பொழுது வளர்ந்து செல் விளைவு விதியின் (Increasing Returns) காரணமாக

 capital formation

conglomeration

உற்பத்திச் செலவு குறைகின்றது. இதனால் பேரளவு உற்பத்தியில் கவனம் செலுத்துகின்றனர். பேரளவு உற்பத்தியின் மையமாக எந்திரம் இருக்கின்றது. எந்திரங்களைப் பயன்படுத்துகின்ற குவிதல் முறை உற்பத்தி நகரங்களைத் தோற்றுவிக்கின்றன.

இன்றைய உற்பத்தி அமைப்பு முறையில் கிராமங்கள் மூலப் பொருட்களை உற்பத்தி செய்கின்றன. நகரங்களில் இருக்கின்ற பெருந்தொழில்கள் மூலப் பொருட்களை நுகர் பொருட்களாக மாற்றுகின்றன. விலைப் பொருளாதாரத்தில் மூலப் பொருளின் விலை குறைவாகவும், நுகர் பொருளின் விலை அதிகமாகவும் இருக்கின்ற வகையில் விலை நிர்ணயிக்கும் முறை இருக்கின்றது. போக்குவரத்துச் சாதனங்கள், நிதி நிறுவனங்களான வங்கிகள் (Banks) போன்றவை, வணிகர்களின் கூட்டமைப்புக்கள், தரகர்களின் கழகங்கள் எல்லாம் நகரங்களில் செயல்படுகின்றன. இத்தகைய சூழலில் கிராமங்களை நகரங்கள் சுரண்டி வாழ முடிகின்றது.

division of labour

மேற்கத்திய உற்பத்தி முறையில் உற்பத்திச் சாதனங்களின் இணைப்பு உற்பத்திச் செலவைக் குறைக்கின்ற நோக்கில் அமையும். மிகுதியாக இருக்கும் உற்பத்திச் சாதனத்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திற்கு இடமில்லை. எடுத்துக்காட்டாக நமது நாட்டில் உழைப்பு மிகுதியாகக் கிடைக்கின்றது. மூலதனம் குறைவாக இருக்கின்றது. ஆனால் பேரளவு உற்பத்தியில் வேலைப் பகுப்பினடிப்படையில் எந்திரங்களைப் பயன்படுத்துவதுதான் அதிக ஆதாயத்தைத் தரும். ஆதலால் உற்பத்தியாளர்கள் உழைப்புச் செறிவுள்ள தொழில்களைத் தொடங்குவதைவிட மூலதனச் செறி

labour intensive
capital intensive

வுள்ள (மிகுதியாக எந்திரங்களைப் பயன்படுத்துகின்ற) தொழில்களையே தொடங்குவார்கள். இதனால் அவர்களுக்கு இலாபம் கிடைக்கும். ஆனால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற சிக்கல்கள் எழும்.

காந்தியடிகள் மேற்கத்தியப் பொருளாதாரச் சிந்தனையிலும் செயலிலும் இருக்கின்ற குறைபாடுகளை உணர்ந்தார். நாம் கண்ணை மூடிக் கொண்டு அவர்கள் வழியில் செல்வதிலுள்ள கேடுகளைச் சுட்டிக் காட்டினார். "ஒரு நாட்டிற்கு அமிழ்தமாக இருக்கும் நிலை மற்றொரு நாட்டிற்கு நஞ்சாக இருக்கலாம்", என்பதனைச் சுட்டிக் காட்டி, நமது நாட்டிற்கு ஏற்ற உற்பத்தி முறைகளைக் கூறுகின்றார்.

நமது நாட்டின் நிலை: இந்தியா இன்றும் ஒரு வேளாண்மை நாடுதான். எண்பது சதவிகிதத்திற்கு மேல் மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். கிராம சமுதாய வாழ்க்கையும், அதற்கு அடிப்படையாக இருக்கின்ற வேளாண்மை—சிறு தொழில்களை உள்ளடக்கிய பொருளாதார வாழ்க்கையும் மேலை நாடுகளிலிருந்து வேறுபட்டவை. இந்திய நாகரிகமும் பண்பாடும் நமது கிராமங்களின் வாழ்வைச் சார்ந்தவை. இந்த உண்மையை உணர்ந்ததால்தான் காந்தியடிகள் இந்தியாவின் உயிர் நாடி கிராமங்களென்பதையும், கிராமங்கள் வாழ்ந்தால் தான் இந்தியா வாழுமென்பதையும் வலியுறுத்திக் கூறுகின்றார். ஆதலால் கிராமங்களுக்குப் பாதகமாக அமைகின்ற எந்த உற்பத்தி முறையையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர், "என்னுடைய திட்டத்தில் கிராமங்களில் எவற்றை நன்றாக, நகரங்களில் உற்பத்தி செய்வதைப் போன்றே, உற்பத்தி செய்ய முடியுமோ, அவற்றை நகரங்களில் தயாரிக்க அனுமதிக்க மாட்டோம்.

final destination

நகரங்கள் கிராமப் பொருட்களின் தீர்வகங்களாக மட்டுமே சரியான முறையில் செயல்படும்.'' (ஹரிஜன் 28-1-1939) என்று கூறுகின்றார்.

பாரத நாடு ஓர் ஆன்மீகப் பின்புலத்தைப் பெற்ற நாடு. அருளையும் பொருளையும் பிரிக்காமல் இணைத்து எண்ணிப் பார்த்த நாடு. இந்த அறத்தையும், அருளையும் புறக்கணிக்கின்ற உற்பத்தி அமைப்புக்களுக்கு இடம் கொடுப்பது தற்கொலை முயற்சியாக இருக்கும்.

நமது நாட்டுச் சூழ்நிலையை அறிந்து, நமது ஆன்மாவை அழிக்காத, ஒரு பொருளாதார வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில்தான் நமது பெருமை இருக்கின்றது. வெளியிலிருந்து வருகின்ற நல்லவற்றை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அவை நமது நாட்டின் மண்ணுக்கேற்றவைகளாவென்பதை ஆராயாமல் ஏற்கக் கூடாது.

வேளாண்மையும் அதனைச் சார்ந்த தொழில்களும் : சமுதாயத்திற்கு நலம் பயக்கின்ற, தேவையான பொருட்களை மட்டும் உற்பத்தி செய்கின்ற வகையில் காந்தியப் பொருளாதாரத்தில் உற்பத்தி அமையும். எண்ணற்ற மக்கள் வாட்டும் வறுமையில் வாடுகின்ற பொழுது, ஒரு சிலரின் ஆடம்பரத் தேவைகளுக்காகப் பொருட்களை உற்பத்தி செய்யும் போக்கு இருக்காது.

எளிமையான வாழ்க்கையை நடத்தும் மக்களுக்கு வேண்டியவற்றை வேளாண்மையின் மூலமாகவும், அதனைச் சார்ந்த கைத்தொழில்களையும், கதர் கிராமத் தொழில்களையும் வளர்ப்பதன் வாயிலாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

இலாப நோக்கில் தேவையை எதிர்பார்த்து ஏராளமாக உற்பத்தி செய்து குவிக்கும் பெருந்தொழில் அமைப்பில் முதலாளிகள் — தொழிலாளிகள் (இருப்பவர்கள் — இல்லாதவர்கள்) என்ற இரண்டு போரிடும் இனங்கள் இருக்கின்றன. சமுதாயத் தேவையை ஒட்டி உற்பத்தி செய்கின்ற வேளாண்மை, சிறு தொழில்களில் இத்தகைய பிரிவு (பிளவு) தோன்றுவதற்கு இடமில்லை. பேராசை வளர வாய்ப்பில்லை. சிறிய சமுதாயங்களாக தன்னிறைவை நோக்கமாகக் கொண்டவைகளாக இருக்கின்ற அமைப்பு முறையில் மனிதர்களுக்கிடையில் நெருக்கமான தொடர்பு இருக்கும். கலப்படம், கள்ளச்சந்தை, சுரண்டல் போன்ற பொருளாதாரச் சீர்கேடுகள் தோன்றாது.

காந்தியப் பொருளாதார உற்பத்தி முறைகளில் தனி மனிதர்களின் திறமை வளர்ச்சிக்கு இடமிருக்கும். சமுதாய உணர்வு மலர்ந்திருக்குமாதலால், மனித குலத்திற்குக் கேடு விளைவிக்கின்ற மதுவகைகளை, போர்த் தளவாடங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்ய மாட்டார்கள்.

கதர், கிராமக் கைத் தொழில்களின் சிறப்புக்களில் ஒன்று அவை பரவல் முறையில் அமைவதாகும். நாடெங்கும் அவற்றைத் தொடங்கலாம். மிகுதியாக மூலதனமோ, ஆழ்ந்த பயிற்சியோ வேண்டியதில்லை. எவரும் எளிதாகக் கற்று. யாரையும் சார்ந்திருக்காமல் வாழ்க்கையை நடத்தலாம். இவற்றில் வேலைவாய்ப்பு மிகுதியாக இருப்பதால் நாட்டிலுள்ள மனித சக்தியை முழுமையாகப் பயன்படுத்தலாம். "நாட்டிலுள்ள மக்களுக்கெல்லாம் உழைத்து வாழ உரிமை உண்டு", என்கின்றோம். அந்த

உரிமை ஏட்டளவில் இல்லாமல் செயலளவில் வருவதற்கு பரவல் முறையில் அமையும் கதர்-கிராமத் தொழில்கள் வாய்ப்பளிக்கின்றன.

எந்திரங்களின் பங்கு: பேரளவு உற்பத்தி முறையின் மையமாக எந்திரங்கள் இருக்கின்றன. காந்தியடிகள் நமது நாட்டின் புதிய பொருளாதார அமைப்பில் எந்திரங்களின் நிலை என்னவென்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து அவரது கருத்துக்களை மிகவும் தெளிவாகக் கூறியிருக்கின்றார்.

தொழிற்புரட்சிக்குப் பின்னால் தோன்றிய பெரிய இராட்சத எந்திரங்கள் எல்லாம் மனிதனுக்குத் துணையாகப் பணியாற்றுபவைகளாக இல்லாமல் மனிதனை அடிமைப்படுத்துபவைகளாக, உழைப்பைச் சுரண்டுபவைகளாக, மனிதத் தொடர்புகளில் இதயமற்ற போக்கை ஏற்படுத்துபவைகளாக, முற்றுரிமைக்கு (Monopoly) வழிகோலுபவைகளாக இருக்கின்றன. ஆதலால் காந்தியடிகளால் எந்திரங்களை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. அவரது ''இந்திய சுயராஜ்யம்'' எனும் நூலில் அவரது தொடக்க காலக் கண்ணோட்டம் நன்கு தீட்டப் பெற்றுள்ளது.

காந்தியடிகள், ''அழிவுக்குரிய எல்லா எந்திரங்களையும் ஐயத்திற்கிடமின்றி நான் எதிர்க்கின்றேன். ஆனால் தனி மனிதர்களின் தொல்லைகளைக் குறைக்கக் கூடிய, இலட்சக் கணக்கான குடிசைகளின் சுமையைக் குறைக்கக் கூடிய எளிய கருவிகளையும், எந்திரங்களையும் நான் வரவேற்கின்றேன்'', (யங் இந்தியா 17-6-1926) என்று கூறுகின்றார். இதிலிருந்து காந்தியடிகள் எந்திரங்களை மனித இனத்திற்கு நன்மை பயக்கக் கூடிய எளிமையானவை, மனித

நலத்தைப் பாதிக்கக் கூடிய மற்றவை என்று பகுத்துப் பார்ப்பதைக் காண்கின்றோம்.

இந்தியாவில் எந்திரங்களின் இடம் எதுவாக இருக்க முடியுமென்பதைப் பற்றியும் எண்ணியிருக்கின்றார். "செய்ய வேண்டிய வேலையின் அளவோடு ஒப்பிடுகின்ற பொழுது வேலை செய்யக் கூடிய கைகள் குறைவாக இருக்குமானால் எந்திரமயமாக்குதல் நல்லதாக இருக்கும். இந்தியாவில் இருப்பதைப் போல, வேலையின் தேவையை விட உழைக்கும் கைகள் மிகுதியாக இருக்குமானால் எந்திரமயமாக்குதல் தீமையானதாக இருக்கும். நம்மிட மிருக்கின்ற சிக்கல், நமது கிராமங்களில் வாழ்கின்ற இலட்சக்கணக்கான மக்களுக்கு எப்படி ஓய்வைக் கண்டு பிடிப்பது என்பதன்று. நமது சிக்கல், அவர்களுடைய வீணாகும் நேரத்தை எப்படிப் பயன்படுத்துவது என்பது தான். ஆண்டில் ஆறுமாதங்களுக்குச் சமமாக அவர்கள் வேலையற்றிருக்கின்றார்கள்", என்று காந்தியடிகள் கூறு கின்றார்.

நமது தொழில் நுணுக்க முன்னேற்றம் சிறு தொழில் களின் ஆக்கத்திறனை உயர்த்துவதாக இருக்க வேண்டும். மனிதனின் தொல்லைகளைக் குறைப்பதாக இருக்க வேண்டும். மனிதனையே புறக்கணித்து ஒதுக்குவதாக இருக்கக் கூடாது.

இரும்பு உற்பத்தி போன்ற அடிப்படைத் தொழில் களை பெரிய அளவில் அமைக்க வேண்டிய அவசியத்தைக் காந்தியடிகள் ஏற்றுக் கொள்கின்றார். ஆனால் அவற்றை தனியார் கைகளில் விடாமல், சமுதாய நலன் கருதி சமுதாயமே நடத்த வேண்டுமென்று கருதுகின்றார்.

வெளிநாடுகளின் சந்தைகளுக்காகப் பெரிய தொழில்களை அமைப்பதைக் காந்தியடிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. அத்தகைய கண்ணோட்டம் உலகத்து மனித குலத்திற்குப் பாதகமானதென்பதை விளக்குகின்றார். "மனித சமுதாயத்திற்கு தொழில் மயமாக்குதல் ஒரு சாபக்கேடாக இருக்குமென்று அஞ்சுகின்றேன். ஒரு நாட்டை மற்றொரு நாடு சுரண்டுவதென்பது எல்லாக் காலங்களிலும் நடந்து கொண்டிருக்க இயலாது போட்டியில்லாத நிலையில், வெளிச் சந்தைகள் உங்களுக்காக அமைந்து, எந்த அளவிற்கு அவற்றைச் சுரண்ட உங்களால் முடியுமென்பதை ஒட்டியே எந்த அளவிற்குத் தொழில் மயமாக்க முடியுமென்பது அமையும்...... எதிர்காலத்தில் இத்தகைய வாய்ப்பு மேற்கத்திய நாடுகளுக்கே குறைவாக இருக்கும், இந்தியாவிற்கு இந்நிலை மேலும் குறைந்த வாய்ப்புக்களையே வழங்கும்," என்று கூறியிருக்கின்றார்.

உலகப் போர்கள் தோன்றியதற்குக் காரணமே தொழில்மயமான நாடுகள் உலகச் சந்தையைப் பிடிக்கப் போட்டியிட்டதுதான். இதனை அறிந்து கொண்ட பின்னும் அதே வழியில் செல்வது அறிவுடைமையாகாது.

காந்தியப் பொருளாதாரம் மனித சமுதாயத்திலுள்ள மக்களனைவருக்கும் பயன்படுகின்ற எந்திரங்களையோ மின்சாரத்தையோ எதிர்க்கவில்லை. அவற்றைப் பயன்படுத்துகின்ற பொழுது அவற்றின் விளைவுகளை அறிந்து, தெரிந்தெடுத்துப் பயன்படுத்த வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது.

Self sufficiency

தன்னிறைவு : காந்தியம் பொருளாதாரத் தன்னிறைவை நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றது. நாட்டளவில் தன்னிறைவென்பது கிராம அல்லது வட்டாரத்

தன்னிறைவைச் சார்ந்து அமைய வேண்டும். கிராமம் என்பது மிகச் சிறிய பரப்பளவைக் கொண்டிருந்தால், கிராமங்களின் தொகுதியை ஓர் அலகாக (Unit) எடுத்து. அந்தப் பகுதியின் (Area) தன்னிறைவைக்கான உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் திட்டமிட்டு முயல வேண்டும்.

"சுதேசி" உணர்வின்றி தன்னிறைவைப் பெற இயலாது. ஒவ்வொரு வட்டாரத்திலும் இருக்கின்ற இயற்கை வளங்கள், உற்பத்திக் கருவிகள், மக்களின் தேவை ஆகியவற்றைக் கணக்கிலெடுத்து, நாம் அமைக்க விரும்புகின்ற புதிய சமுதாயத்தின் நோக்கங்களுக்கேற்ப உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும். எல்லா மக்களின் அடிப்படைத் தேவைகளும் நிறைவு பெறுதவரை வசதிப் பொருட்களையோ, ஆடம்பரப் பொருட்களையோ, இலாப நோக்கத்தோடு ஏற்றுமதிக்குரிய பொருட்களையோ உற்பத்தி செய்யக் கூடாது. உற்பத்தி பெருமளவில் (Mass Production) இருக்க வேண்டுமென்று கருதக் கூடாது. உற்பத்தி மக்களுக்காக (Production for Mass) இருக்க வேண்டுமென்று எண்ண வேண்டும்.

உற்பத்திச் சாதனங்களின் உடைமை: இன்று உற்பத்திச் சாதனங்கள் தனியார் கைகளிலிருக்கின்றன. தனிப்பட்டவர்களின் விருப்பப்படி அவை அவர்களது இலாப நோக்கக் கண்ணோட்டத்தின்படியும் கணக்கின் வழியும் பயன்படுத்தப் பெறுகின்றன. இதனால் சமுதாய நலம் புறக்கணிக்கப் பெறுகின்றது. சுரண்டல் இத்தகைய அமைப்பு முறையின் தவிர்க்க முடியாத இயல்பாகி விடுகின்றது. இதனால்தான் இன்றைய முதலாளித்துவ— அமைப்பு முறையை அழித்துவிட்டு எல்லா உற்பத்திச் சாதனங்களையும் அரசுடைமையாக்க வேண்டுமென்று பொதுவுடைமையினர் கூறுகின்றனர். Socialists

காந்தியடிகள் தனியுடைமை முறையிலுள்ள குறைகளை உணர்ந்திருக்கின்றார். ஆனால் அரசுடைமையை அவர் அப்பழுக்கற்ற முறையாக ஏற்றுக் கொள்ளவில்லை. அரசும் முதலாளித்துவ மனப்பான்மையோடு நடந்து கொள்ளக் கூடும். அரசு நிறுவனங்களை நடத்துகின்றவர்கள் பொதுநல நோக்குடையவர்களாக இல்லாவிட்டால் எதிர்பார்க்கும் பலன் விளையாது அரசு நிறுவனங்களின் நிர்வாகிகள் தனி இனமாக வளர்கின்ற ஆபத்தும் உண்டு அளவுகடந்த அரசின் கட்டுப்பாடும் ஆதிக்கமும் தனிமனித வளர்ச்சிக்குத் துணையாக இருப்பதில்லை. பெரும்பாலும் அரசுடைமை குவியல்முறைமையத் திட்டம், பேரளவுத் தொழில்கள் என்ற திக்கிலேயே செல்லுகின்றது. ஆதலால் காந்தியடிகள் அரசுடைமையை முழுக்க ஆதரிக்கவில்லை.

அண்ணலின் நோக்கில் சமுதாய உடைமைதான் (Social Ownership) ஏற்ற அமைப்பாக இருக்க முடியும். எல்லா உற்பத்திச் சாதனங்களும் சமுதாயத்தின் உடைமையாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் சமுதாயத்தின் விருப்பம் போல் உற்பத்தி நடைபெறும்.

தனியார் கையிலிருக்கின்ற உற்பத்திச் சாதனங்கள் சமுதாயத்தின் உடைமையாவதற்கு முந்திய—இடைப் பட்ட—நிலையாக தனியாரின் அனுபவங்களைப் பயன் படுத்துகின்ற ஓர் ஏற்பாடாக தர்மகர்த்தா முறையைச் (Trusteeship) கூறியுள்ளார். செல்வந்தர்களின் மன மாறுதல் மூலமாகவோ, சட்டத்தின் மூலமாகவோ தோன்றுகின்ற தர்மகர்த்தா முறை ஒரு புதிய இலட்சிய சமுதாய அமைப்பு முறைக்கு ஏற்றதாக இருக்கும்.

கூட்டுறவு அமைப்பு முறை: இன்றைய அமைப்பு முறையில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தியை மேற் கொள்வதை காந்தியம் விரும்புகின்றது. இப்பொழுதிருக் கின்ற கூட்டுறவு சங்கங்கள் அரசால் அமைக்கப் பெற்ற வையாக, அதிகாரிகளின் ஆளுகைக்கு உட்பட்டவைகளாக, ஒரு சிலரின் நன்மைகளுக்காக இயங்குபவைகளாக இருக் கின்றன. இந்நிலை மாறி அவை மக்களின் நிறுவனங் களாகச் செயல்பட வேண்டும்.

காந்தியச் சான்றோரான கே. ஜி. மஸ்நுவாலா, "ஒரு கூட்டு இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த முயற்சியுள்ள ஓர் இளைஞன் அயல்நாடு சென்று பணம் சேர்க்கின்றான். அவன் அதனைக் குடும்பத்திலுள்ள மற்றவர்களோடு பங்கிட்டுக் கொள்ள வேண்டும். அதே போன்று அவன் குடும்பத்தில் இல்லாத பொழுது குடும்பத்திலுள்ளவர் களுக்குக் கிடைத்த வருமானத்திலும் பங்கு பெறுவான். ஏன—இந்தக் குடும்ப வரம்பை விரிவுபடுத்தி, குத்தகைக் காரனையும் கூலியாளையும், உண்மையில் கிராமம் முழுமை யையும் அதற்குள் கொண்டுவர முடியாது? பின்பு பொறாமை கொள்வதற்குக் காரணமே இருக்காது. அதோடு கூட, அவன் அவனுடைய வெளி முயற்சிகளுக்கு உதவியையும், உற்சாகத்தையும் பெறுவான். இது கூட்டுறவுக் கொள்கையில் முடியும். இது நடைபெறும் பொழுது உழைக்காத நிலக்கிழார், சம்பாதிக்காத பணப் பெருக்கம், சுரண்டல் ஆகிய சொற்கள் வழக்கில் இரா", (Sarvodya 181—182) என்று கூறுகின்றார்.

கூட்டுறவு அமைப்புமுறை உற்பத்தியிலும் முதலாளி, தொழிலாளி என்ற இரண்டு இனங்கள் தோன்றுவதில்லை. கூட்டுறவு நிறுவனங்கள் சமுதாய உணர்ச்சியை மலர்

விக்க முயன்முல், எல்லோரும் இணைந்து வாழ்கின்ற சமுதாயம் உருவாகும். ஏற்றத் தாழ்வை அகற்றவும், மனிதன் மனிதனுல் மதிக்கப்படவும் கூட்டுறவு இயக்கம் அன்பின் அடிப்படையில் முயற்சி செய்யும்.

மக்கட் பெருக்கம்: மால்தசின் மக்கள் தொகைக் கோட்பாடு பரவிய பிறகு, மக்கள் தொகைப் பெருக்கத்தைப்பற்றிய அச்சம் பின்தங்கிய நாடுகளில் வளர்ந்து வருகின்றது. பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை செய்கின்றனர்; மக்களின் எண்ணிக்கை பெருகுமளவிற்கு உற்பத்தியைப் பெருக்க முடியாதென்ற கருத்து வலியுறுத்தப் பெறுகின்றது. இதற்காகப் பல செயற்கை முறையான கருத்தடை முறைகளைப் பரப்புகின்றனர்.

காந்தியடிகள் மக்களின் எண்ணிக்கை ஒரு கட்டுக்குள் இருக்க வேண்டுமென்ற கருத்தை எதிர்க்கவில்லை. அவரது கருத்துப்படி செயற்கைக் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் மனிதனை விலங்கு நிலைக்குத் தாழ்த்தி விடுகின்றன. மனக்கட்டுப்பாட்டு முறைகளை அவர் ஏற்றுக் கொள்கின்முர். பிரம்மச்சரியம் அவர் கூறுகின்ற முறையாகும். தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் முறை மனிதனின் ஆன்மீக மேம்பாட்டிற்குத் துணை செய்கின்றது.

முதலாளிகள் — தொழிலாளிகள் தொடர்பு: மேற்கத்தியப் பொருளாதாரம் முதலாளிகளின் நலனும் தொழிலாளிகளின் நலனும் வெவ்வேறு என்று கருதுகின்றது. இந்த அடிப்படையில்தான் பொதுவுடைமையினர் "இனப் போர்" (Class War) ஒன்றை எல்லாச் சமுதாயங்களிலும் எதிர்பார்க்கின்றனர்.

காந்தியடிகள் சமுதாயத்திலுள்ள எந்த ஒரு பிரிவின் நலமும் மற்றொரு பிரிவின் நலனோடு முரண்படாதவகையில் ஒரு சமுதாயத்தை அமைக்க முடியுமென்று நம்புகின்றார். அவர், "இன்று முதலாளியின் நலனும் தொழிலாளியின் நலனும் ஒன்றுக்கொன்று மாறானவையாய், முரண்படுபவையாயிருக்கின்றன. இதற்குக் காரணம் முதலாளி தன்னிடம் வேலை செய்யும் பாட்டாளிக்கு எதுவுமே தராது, தான் லட்சக் கணக்கில் லாபம் சம்பாதிக்கப் பார்ப்பதே", என்று இன்றைய நடைமுறையைக் கூறியுள்ளார். அவர் "என்னுடைய இலட்சிய சமுதாயத்தில் முதலும் உழைப்பும் ஒன்றுக் கொன்று துணைபுரிபவைகளாகவும், ஆதாரமாகவும் இருக்கும். அவை ஒன்றாக ஒருங்கிணைந்து வாழ்கின்ற பெரிய குடும்பமாக இருக்கும்", என்றும், "ஆலை முதலாளிகளுக்கும் ஆலைத்தொழிலாளர்களுக்கும் உள்ள தொடர்பு தந்தைக்கும் குழந்தைகளுக்கும் உள்ள தொடர்பு போன்றே. உடன் பிறந்த சகோதரர்களுக்குள் இருக்கின்ற தொடர் போன்றே அமைய வேண்டும்", என்றும் கூறியிருக்கின்றார்.

டாக்டர் குமரப்பா கூறுவதைப்போல புலிகளாகக் கொலை வாழ்க்கையோ, குரங்குகளாகக் கொள்ளை வாழ்க்கையோ நடத்தாமல் தேனீக்களாக முயற்சி வாழ்க்கையும், கூட்டு வாழ்க்கையும் நடத்துகின்ற பொழுதும் தாய்மைப் பொருளாதார அமைப்பைக் கொண்டுவரத் தொடர்ந்து முயல்கின்ற பொழுதும் சமுதாயத்திலுள்ள எல்லா மக்களும் ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டு இணைந்து வாழ்கின்ற நிலை ஏற்படும். இந்த முறையிலேயே உற்பத்தித் தொடர்புகள் அமையுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

4

பொருட்களின் மதிப்பும் மாற்றும்

உற்பத்தியின் நோக்கம் நுகர்வு. உற்பத்தி செய்த பொருட்கள் உரிய காலத்தில் தேவையான ஆட்களுக்குச் சரியான அளவில் கிடைக்க வேண்டும். அப்பொழுதுதான் மக்களின் நலம் கட்டிக் காக்கப் பெறும். மோதல்களின்றி இணைந்து வாழ ஏற்றவகையில் பொருட்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும்.

பணம்: மேற்கத்தியப் பொருளாதாரத்தில் பொருட்களின் மதிப்பை அவற்றிற்குள்ள தேவையும் அளிப்பும் நிர்ணயிக்கின்றன. பணத்தின் மூலமாக பொருட்களின் மதிப்பைக் கூறுகின்றனர். பணம் ஓர் அளவுக்கருவியாகச் சரியான முறையில் செயல்படுகின்ற வரை இந்த எதிர்பார்ப்புச் சரியாக இருக்கும்.

நடைமுறையில் இன்றையப் பொருளாதார அமைப்பின் உயிர் நாடியாகப் பணம் இருக்கின்றது. பணம் பண்டமாற்று முறையிலுள்ள குறைகளைப் போக்கிவிட்டு மாற்று மையமாகவும் (Medium of Exchange), மதிப்பளவாகவும் (Standard of Value), மதிப்பு நிலைக்களனாகவும் (Store of Value), கடன் பொறுப்பளவாகவும் (Standard of Deferred Payment) பணியாற்றுவதோடு வேறு சில துணைப்பணிகளையும் செய்வதாகக் கருது

கின்றோம். உண்மையில் பணத்தின் மதிப்பு அடிக்கடி மாறுவதால் பணத்தால் இத்தகைய பணிகளைச் செவ்வனே செய்யமுடியவில்லை. அது சிலருக்குச் சாதகமாக, சுரண்டல் கருவியாக மாறுகின்றது.

பொருட்களின் மதிப்பு அவற்றின் இயல்பான தேவையையும் அளிப்பையும் ஒட்டி அமையுமென்கின்றனர், பெரும்பாலும் இன்று பொருட்களின் அளிப்பு இயல்பானதாக, உற்பத்தி செய்வதெல்லாம் அங்காடிக்கு வருகின்ற நிலையில் இருப்பதில்லை. பொருட்களின் உற்பத்தியும் அளிப்பும் உற்பத்தியாளர்கள், வணிகர்கள் ஆகியோரின் கூட்டு நடவடிக்கைகளாலும், முற்றுரிமை நிறுவனங்களாலும் கட்டுப்படுத்தப் பெறுகின்றன. விளம்பரம் போன்ற முறைகளால் தேவையையும் தங்களது எண்ணம் போல் உருவாக்குகின்றனர். ஆதலால் இன்றைய விலை நிர்ணயம் பொதுவாகச் சாதாரண மக்களுக்குச் சாதகமாக இருப்பதில்லை. இதனை நன்குணர்ந்த காந்தியடிகள் இன்றைய அங்காடி முறையை ஏற்றுக் கொள்ளவில்லை.

காந்திய முறை: காந்தியப் பொருளாதாரத்தில் இன்று இருக்கின்ற சிக்கலான, பல கைகள் மாறுகின்ற, வங்கிக் கடனை அடிப்படையாகக் கொண்ட பெரிய அங்காடி இருக்காது பொருட்களை மாற்றுகின்ற முறை சர்வோதய சமுதாயத்தின் மொத்த அமைப்பை ஒட்டி எளிய முறையில் அமையும்.

சிறிய தன்னிறைவு பெற்ற சமுதாயத்தில் தங்களுக்கு வேண்டியவற்றைப் பெரும்பாலும் தாங்களே உற்பத்தி செய்து கொள்வதால் வெளியிலிருந்து வாங்குவது மிகவும் குறைவாகவே இருக்கும். எளிமையான வாழ்க்கையை

மக்கள் பின்பற்றினால் வேண்டிய பொருட்களின் எண்ணிக்கை மிகுதியாக இருக்காது.

கூடியவரை பணத்தைப் பயன்படுத்தாமல் பண்ட மாற்று முறையில் தேவைப் பொருட்களை மாற்றிக் கொள்கின்ற ஒரு முறையைத் தோற்றுவிக்கலாம். எடுத்துக் காட்டாக நூற்பவர் தனது சிட்டத்தைக் கொடுத்து கூட்டுறவுப் பண்டகசாலை அல்லது சமுதாயப் பண்டகசாலையில் வேண்டியவற்றைப் பெற்றுக் கொள்ள லாம். கிராம சமுதாயத்தில் கூலியாகப் பணத்தைக் கொடுக்காமல், தானியமாகவும் விளை பொருட்களாகவும் கொடுத்த நிலை முன் காலத்தில் நமது நாட்டில் இருந்தது. அப்பொழுது கடைகளில் சென்று வாங்கிய பொருட்களின் அளவு குறைவாக இருந்தது. அதே போன்று ஒரு நிலையைத் திட்டமிட்டுத் தோற்று விக்க இயலும்.

ஒவ்வொரு சமுதாயமும் தன்னிடம் மிகுதியாக இருக்கின்ற விளைபொருள் அல்லது உற்பத்திப் பொருளைத் தேவையுள்ள மற்றைய அலகுகளுக்குக் (வட்டாரங் களுக்கு) கொடுத்துவிட்டு, தங்களுக்கு வேண்டிய வற்றைப் பெற்றுக் கொள்வார்கள். இந்த முறையில் பணம் ஒரு கணக்கலகாக (அளவைக் கருவியாக) மட்டும் பயன்படுத்தப் பெறும். அது ஒரு சுரண்டல் கருவியாக மாறாது.

வாணிபத்திற்காக என்று பொருளை உற்பத்தி செய் கின்ற நிலை தவிர்க்கப்படுகின்ற பொழுதே விலை நிர்ணயச் சிக்கலும் தீர்க்கப்பட்டு விடுகின்றது. 'சுதேசி' மனப் பான்மையுள்ள சமுதாயத்தில் வெளிநாட்டுப் பொருட் களின் மீதிருக்கின்ற மோகம் குறைந்து விடும்.

செயற்கையாகப் பற்றாக் குறையை ஏற்படுத்தியும், தேவையைப் பற்றிய கணிப்பின்றி உற்பத்தி செய்து வாணிபச் சுழலை உருவாக்கியும் பொருளாதார நடவடிக்கைகளை நிலையின்றிச் செய்கின்ற போக்குக்களை விலக்குகின்ற பொழுது பண வீக்கம், பணவாட்டம் போன்றவை ஏற்படமாட்டா.

காந்தியடிகள், "பணம் உழைப்பைப் போன்று அதனுடைய பயனைக் கொண்டிருக்கின்றது...... எப்பொழுது உழைப்பு தன்னுடைய மரியாதையை அறிந்துகொள்கின்றதோ அப்பொழுது பணம் அதற்குரிய சரியான இடத்தைக் கண்டு கொள்ளும். அதாவது, உழைப்பிற்குப் பாதுகாவலாக அது பயன்படுத்தப்படும். ஏனென்றால் பணத்தைவிட உழைப்புச் சிறந்ததாகும்," என்று கூறியுள்ளது நினைக்கத் தக்கது. பணத்தைக் குறைந்த அளவில், அதனுடைய உள்ளார்ந்த கேடுகளைக் களைந்த நிலையில் பயன்படுத்துகின்ற அமைப்பு முறையைத் திட்டமிட்டுத் தோற்றுவிக்க வேண்டும்.

நமது சமுதாயத்தில் இன்று விலையேற்றம் பெரிய — தீர்க்க இயலாத — சிக்கலாக இருக்கின்றது. இதற்குக் காரணம் இன்றுள்ள அமைப்பு முறையாகும். நமது அங்காடி முறை பற்றாக்குறைச் சூழ்நிலையை உருவாக்கி, அதனால் மிகுதியாக இலாபம் பெறுகின்றவர்களுக்குச் சாதகமாக இருக்கின்றது. பொருட்களின் பகிர்வில் தக்க மாற்றம் தேவை. அந்த மாற்றம் அடிப்படைப் பொருளாதார அமைப்பை ஒட்டியே அமையும். இதனை காந்தியடிகள் தெளிவாகக் கூறியுள்ளார்.

5

பகிர்வு (DISTRIBUTION)

இன்றையப் பொருளாதார அமைப்பில் நாட்டின் வருவாய் எல்லாம் வாரம், கூலி, வட்டி, இலாபம் என்ற நான்கு வகைகளாகப் பிரிந்து மக்களுக்குச் செல்கின்றதென மேற்கத்தியப் பொருளாதாரக் கோட்பாடுகள் கூறுகின்றன. உற்பத்தியில் ஈடுபடுகின்ற உற்பத்திச் சாதனங்கள் வருவாயை அவை பங்கு பெறுகின்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்வதாகக் கருதுகின்றனர். இந்த அடிப்படையில் நிலத்திற்கு (land) வாரமும் (Rent), உழைப்பிற்குக் (labour) கூலியும் (Wages), முதலுக்கு (Capital) வட்டியும் (Interest), அமைப்பிற்கு (Organisation) இலாபமும் (Profit) கிடைக்கின்றன. ஒருவரே மிகுதியாக உற்பத்திச் சாதனங்களை உடையவராக இருந்தால் அவருக்கு மிகுதியாக வருவாய் கிடைக்கின்றது.

ஏற்றத் தாழ்வு : இன்றையப் பகிர்வில் மக்களின் வருவாயில் மிகுந்த ஏற்றத் தாழ்வும், அதன் விளைவாகச் சொத்துடைமையில் அதிக ஏற்றத் தாழ்வும் நடைமுறை இயல்பாகி விட்டது. காந்தியடிகள், "ஒரு சிலர் செல்வத்திற் புரண்டு கொண்டும், பெரும்பாலான மக்களுக்கு வயிறு நிரம்பச் சோற்றிற்கே வழியில்லாமலும் உள்ள இப்பொழுதைய அக்கிரமமான ஏற்றத் தாழ்வுகள்

இருந்து வரும்வரை ராமராஜ்யம் பற்றிய பேச்சுக்கே இடமில்லை" (ஹரிஜன் - 1 - 6 - 1947) என்று கூறுகின்றார். இந்த உண்மையை உணராமல் புதிய சமுதாயத்தை அமைக்க இயலாது.

இன்றைய வருவாய் ஏற்றத் தாழ்வுக்கு அடிப்படைக் காரணங்களில் ஒன்று உற்பத்திக் கருவிகள் சிலரின் உடைமையாக இருக்கின்றன. நிலமும், முதலும் அமைப்புத் திறனும் பரம்பரைச் சொத்துக்களாகச் சிலரின் கையில் குவிந்திருக்கின்றன. இதனால் நாட்டின் வருவாயில் பெரும்பகுதி இவர்களுக்கே வாரம், வட்டி, இலாபமாகச் செல்கின்றது. மேலும் உழைப்புக்கு உரிய பங்கு கிடைப்பதில்லை. உழைப்பைச் சுரண்டுவது பல வகைகளில், பல நிலைகளில் நடைபெறுகின்றது. இதனைக் காந்தியடிகள், "இந்தியாவில் ஆங்காங்கு காணப்படும் மாட மாளிகைகள் இந்தியாவின் செல்வத்திற்கு அடையாளங்களல்ல. அவை இந்நாட்டின் கோடானுகோடி மக்கள் வயிற்றிலடித்து அவர்கள் உழைப்பால் கொழுத்துப் பெருத்திருக்கும் ஒரு சிலருக்குள்ள பலத்தையும், அதன் விளைவான தான்தோன்றித் தனத்தையுமே காட்டுகின்றன" (யங் இந்தியா 28 - 4 - 1927) என்று கூறியிருக்கின்றார்.

வருவாய் வருகின்ற வழிமுறையும் தூய்மையானதாக, பிறர் பங்கைத் திருடாததாக இருக்க வேண்டும். ஆனால் இன்றைய சமுதாயம் ஒருவருக்கு எப்படிப் பணம் வருகின்றதென்பதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஒருவர் கையில் பணமிருந்தால் அதனைப் போற்றி மதிக்கின்றது. "பொதுவாகப் பணக்காரர்களுக்கே — ஏன் பெரும்பாலானவர்களுக்கு — எந்த வழியில் தாம் பணம் சேர்க்கிறோம், அது சரியா தவறா என்பது பற்றிக்

கவலையே இருப்பதில்லை என்ற கருத்தை ஒப்புக் கொள்வதில் எனக்கு ஆட்சேபணையில்லை" (ஹரிஜன் - 22-2-1942) என்று காந்தியடிகள் கூறியிருப்பது இங்கு சிந்திக்கத் தக்கது.

இன்று இலஞ்சம், கள்ளப்பணம், கலப்பட இலாபம் போன்றவை மக்களின் வருவாயோடு சேர்கின்றன. இவை தனியாட்சி நடத்துகின்ற கறுப்புப் பணம் உருவாகவும், சமுதாயச் சீர்கேடுகள் மலியவும் காரணமாகின்றன. ஆதலால் சர்வோதய அமைப்பில் வருவாய் வருகின்ற வழிமுறைகளும் தூய்மையாக இருக்கின்றனவா என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

உழைத்து வாழ்தல் (Bread Labour): காந்தியடிகள் இன்றைய வருவாய்ப் பகிர்விலுள்ள அடிப்படைச் சீர்கேட்டை உணர்ந்து, அதனைத் தீர்க்க ஏற்ற முறையாக எல்லோரும் கட்டாயமாக உடல் உழைக்க வேண்டுமென்பதைக் கூறுகின்றார்.

அவருடைய இலட்சிய சமுதாயத்தில் மார்கஸ் கூறியிருப்பதைப் போன்றே, ஒவ்வொருவரும் தங்களது ஆற்றலுக்கேற்றபடி உழைத்து தங்களது தேவைக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனல் இதனை உடனே அடைய முடியாது. காலப் போக்கில் இதனைச் செயல்படுத்த முயலலாம்.

உடனடியாக எல்லோரும் உழைக்கத்தக்க நடவடிக்கைகள் தேவை. காந்தியடிகள் உடல் உழைப்பின் மீது அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். அவர், "கடவுள் மனிதனை நெற்றி வியர்வை சிந்த உழைத்துச்

சாப்பிட வேண்டுமென்றே படைத்திருக்கின்றார்" (ஹரிஜன்-16-5-1936) என்றும் "தொண்டு நோக்கத்தோடு ஒரு ஆணோ, பெண்ணோ உடலால் உழைக்கின்ற பொழுது தான் அவனுக்கோ அல்லது அவளுக்கோ வாழ உரிமை கிடைக்கின்றது" (யங் இந்தியா-20-9-1928) என்றும் "அகிம்சையைப் பின்பற்ற, சத்தியத்தை வணங்க, பிரம்மச் சரியத்தை இயற்கைச் செயலாகக் கொள்ள விரும்புகின்ற ஒருவருக்கு உடல் உழைப்பு ஒரு வரப்பிரசாதமாகும்", (Yarvada Mandir, Chap. IX) என்றும் கூறியிருப்பவை அண்ணலின் கருத்துக்களை வெளிக்காட்டுகின்றன.

இன்றைய சமுதாயத்தில் உழைப்பை "உடல் உழைப்பு", "மூளை உழைப்பு" என்று இரண்டாகப் பகுக் கின்றோம். உடலால் உழைப்பவர்கள் மூளை வளர்ச்சியில் ஈடுபட வாய்ப்பின்றி இருக்கின்றனர். மூளை உழைப் பாளர்கள் உடலுழைப்புச் செய்வதைக் கீழானதாகக் கருதுகின்றனர். ஆனால் உடல் நலனைப் பேண உடற் பயிற்சிகளைச் செய்கின்றனர். உழைப்பு உருவாக்கும் ஆற்றலுடையதாக இருக்க, அதனை வெறும் உடற்பயிற்சி களில் செலவிடும் போக்கைக் காந்தியடிகள் நையாண்டி செய்கின்றார்.

சமுதாயத்திலுள்ள எல்லோரும் எங்கிருந்தாலும்—நகரத்தில் வாழ்ந்தாலும் — உழைக்க வேண்டும். நூற்பு இந்த வகையில் எல்லோருக்கும் ஏற்ற உடலுழைப் பாக அமைவதைக் காணலாம.

இன்றையப் பொருளாதார அமைப்பு முறையில் மூளை உழைப்பாளர்களுக்கு மிகுதியாக ஊதியம் கிடைக் கின்றது. இந்நிலை மாற வேண்டும். இந்நிலை மாறாத வரை ஏற்றத்தாழ்வு தொடர் நிகழ்ச்சியாகிவிடும்.

சமப் பங்கீடு: காந்தியடிகள் அனைவருக்கும் தேவையின் அடிப்படையில் ஒன்றுபோல ஊதியம் கிடைக்க வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருக்கின்றார். இதனை அவர், "ஒவ்வொருவர் உடலிலும் தலை உச்சியிலிருப்பதால் அது உயர்ந்ததாவதில்லை, பாதங்கள் தரையைத் தொட்டுக் கொண்டிருப்பதால் அவை தாழ்ந்துவிடுவதில்லை. உடலின் உறுப்புகளெல்லாம் சம மதிப்புள்ளவையாயிருப்பதைப் போலவே, சமூகத்தின் உறுப்பினரான மக்களனைவரும் சமம், சமமானவரென்பதே அபேதவாதமென்பது" (ஹரிஜன்-13-7-1947) என்றும், "சமப் பங்கீடு என்பதன் பொருள் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது இயற்கைத் தேவைகள் அனைத்தையும் அளித்தல், அதிகமாக எதுவும் அளியாமை என்பதே......இந்த லட்சியத்தை அமுலாக்குவதற்கு சமூக அமைப்பு முழுவதையுமே திருத்தி அமைத்தாக வேண்டும்" (ஹரிஜன்-25-8-1940) என்றும் கூறியிருக்கின்றார்.

வருவாயை மட்டும் சமமாக்கினால் போதாது; இருக்கின்ற சொத்துக்களின் உடைமையிலும் மாற்றம் வேண்டும். இதனை காந்தியடிகள், "உண்மையில் இந்தச் சமப்பங்கீட்டுத் தத்துவத்திற்கு வேர் போன்று அமைய வேண்டியது பணக்காரர்கள் தம்மிடம் தேவைக்கு அதிகமாய் உள்ள பணத்திற்கு, பொருளுக்குத் தம்மை தர்மகர்த்தா என்று கருதுதலே" (ஹரிஜன்-25-8-1940) என்று கூறுகின்றார்.

மனப்பான்மை: காந்தியப் பொருளாதாரத்தில் அமைகின்ற பகிர்வுமுறை மக்களின் மனப்பண்பினைச் சார்ந்து அமையும். எளிய, பற்றற்ற, சுய கட்டுப்பாடுள்ள, இறை நம்பிக்கை கொண்ட மக்களால்

இத்தகைய பகிர்வு முறையைச் செயல்படுத்த முடியும். அண்ணல் கூறியதைப் போல, "இந்தக் கோடானுகோடி மக்களுக்கு உண்ணப் போதிய உணவுக்கும், உடுக்கப் போதிய உடைக்கும் ஏற்பாடு ஆகும்வரை நமக்குச் சொத்து சுதந்திரங்கள் வைத்துக் கொள்ள உரிமையே டையாது" என்று எல்லோரும் எண்ணுதவரை ஒரு சரியான அமைப்பு நிலையானதாக ஏற்படாது.

காந்தியடிகள் சட்டங்களின் மூலமாக எல்லாப் பொருளாதார மாற்றங்களையும் கொண்டுவந்துவிட முடியுமென்று நம்பவில்லை. தக்க மனப்பான்மையை உருவாக்காமல் சட்டங்களின் மூலமாக வருகின்ற மாற்றங்கள் மண்ணில் வேர்கொண்டு நிலைத்திராவென எண்ணுகின்றார். இதனால்தான் அவரது சமுதாயப் பொளாதார மாற்ற வழிமுறைகள் பொதுவுடைமையிலிருந்து அடிப்படையிலேயே மாறுபட்டிருக்கின்றன. socialism

6

அரசும் பொருளாதாரமும்

காந்தியடிகளின் கருத்துப்படி "இறுதி நிலையில் அரசு இருக்காது." மக்களை மக்களே நிர்வகித்துக் கொள்ளும் நிலை உருவாகும். ஆனால் அரசு அதுவரை வரையறுக்கப் பெற்ற அதிகாரங்களோடு செயல்பட வேண்டும்.

பலாத்காரத்தைப் பயன்படுத்தாமல் அரசால் இயங்க முடிவதில்லை. ஆதலால்தான் அகிம்சை வழிச் சமுதாயத்தில் அரசுக்கு இடமில்லாமல் போகின்றது.

அரசு மிகக் குறைவான அளவிலேயே தனது கட்டுப் பாட்டை வைத்துக் கொள்ள வேண்டும். சமுதாயம் கட்டுப்பாட்டு அதிகாரத்தைப் பெற்றிருக்கலாம். அரசு ஓரளவு ஒதுங்கி நின்று பொருளாதார நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டும்.

அரசு மிகுதியாக வரிகளை வாங்கி, எல்லாப் பொதுப் பணிகளையும் அதுவே நிறைவேற்ற எண்ணக் கூடாது. இதனால் அரசின் சுமை கூடும். மக்கள் முயற்சியற்ற வர்களாகப் போய் விடலாம்.

அரசு வாங்குகின்ற வரிகளைப் பணமாக மட்டு மில்லாமல் பொருட்களாகவும் (விலை பொருட்களாக)

வாங்குகின்ற நிலை வரவேண்டும். அரசு ஏழை எளிய வர்களின் பாதுகாவலனாக இருக்க வேண்டும். மக்கள் நலனுக்குப் புறம்பான எந்த நடவடிக்கையில் ஈடுபடவும் கூடாது.

காந்தியடிகள் அரசு திட்டமிடுகின்ற மையத்திட்ட முறையை ஏற்றுக் கொள்ளவில்லை. இப்பொழுதுள்ள அரசு திட்டமிடுகின்ற முறையில், அரசு எல்லாம்வல்ல தாக மாறிவிடுகின்றது. மக்கள் அரசின் ஆணைப்படி இயங்குபவர்களாக மாறிவிடுகின்றனர்.

காந்தியத் திட்டம் கீழிருந்து மேல் நோக்கிச் செல் வதாக இருக்கும். ஒவ்வொரு கிராமத்திற்கும் (அல்லது சமுதாய அலகிற்கும்) தன்னிறைவு அடிப்படையில் ஒரு திட்டம் இருக்கும். அந்தத் திட்டம் மக்களால் தீட்டப் பெற்று, வெளியார் தலையீடோ உதவியோ இன்றி அவர் களாலேயே நிறைவேற்றப் பெறும்.

காந்திய முறை அரசு பஞ்சாயத்துக்களை அடிப்படை யாகக் கொண்ட பரவல் முறை அரசாக இருக்கும். பொருளாதாரத்திலும் அத்தகைய பரவல் முறையே இருக்குமாதலால் அரசின் கை ஓங்க வழியிருக்காது.

எதற்கெடுத்தாலும் மக்கள் அரசையே நம்பி வாழ் வதைக் காந்தியடிகள் என்றும் விரும்பவில்லை. மக்கள் தங்கள் காலிலேயே நிற்க வேண்டுமென்பதை எப் பொழுதும் வலியுறுத்தி வந்திருக்கின்றார்.

7

கல்வியும் பொருளாதாரமும்

ஒரு நாட்டின் பொருளாதார வாழ்விற்கும் அங்குள்ள கல்விமுறைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை காந்தியடிகள் சுட்டிக் காட்டுகின்றார். மெக்காலே கல்வித் திட்டத்தைச் சார்ந்து அமைந்திருக்கும் இன்றையக் கல்வி மனிதர்களைக் குமாஸ்தாக்களாக ஆக்கத்தான் பயன் படுகின்றது.

இன்றையக் கல்வி மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளை மலர்விப்பதாக இல்லை. மாறாக அவர்கள் சிலவற்றைப் படித்து, தேர்வு எழுதி, வெற்றி பெற்றால் வேலை பெற உதவுவதாக இருக்கின்றது வேலையின்மைச் சிக்கல் வளர்ந்த நிலையில், சமுதாய உணர்வற்ற தன்னம் பிக்கையை வளர்த்துக் கொள்ளாத இளைஞர்களை உரு வாக்குவதாகவே நமது கல்வி இருக்கின்றது.

Basic

காந்தியடிகள் மக்களை உருவாக்குகின்ற ஆதாரக் கல்வியை வழங்கியிருக்கின்றார். வாழ்க்கைக்காக, வாழ்க்கை முழுவதும், வாழ்க்கையின் மூலம் கிடைக்கின்ற ஆதாரக் கல்வி பயனுள்ளதாக இருக்கும். ஆக்கத்திறன் உடையதாக இருக்கும்.

ஆதாரக் கல்வியில் மாணவர்கள் கைத்தொழில்களின் வாயிலாகக் கல்வியைப் பெறுவார்கள். அந்தக் கல்வி அவர்களை ஆக்கத்திறனுடையவர்களாக மாற்றும்.

காந்தியடிகள், "மனிதன் வெறும் அறிவு ஜீவியோ, அல்லது வெறும் விலங்குடலைப் பெற்றவனோ, வெறும் இதயம் மட்டும் கொண்டவனோ அல்லது ஆன்மா மட்டும் உடையவனோ அல்லன். ஒரு முழுமையான மனிதனை உருவாக்க இந்த மூன்றும் சரியான, ஒருங்கிணைந்த வகையில் இணைவது தேவையாகும். இவைதான் கல்வியின் 'உண்மையான பொருளாதாரத்தை உருவாக்குகின்றன" (ஹரிஜன்-19-12-38) என்று கூறுகின்றார். உடல், மூளை, இதயம் ஆகியவற்றைப் பண்படுத்துகின்ற சரியான கல்வி புதிய சமுதாயத்திற்கு ஏற்ற மனிதர்களை உருவாக்கும்.

இன்றையக் கல்வி மூளை வளர்ச்சிக்கு மட்டும் வாய்ப்பளிக்கின்றது. பிறமொழியில் இன்றையக் கல்வியைப் பெறுபவர்கள் சமுதாய உணர்வற்றவர்களாக தங்களைத் தனி இனமாக எண்ணுகின்றவர்களாக மாறுகின்றனர். இந்த நிலையை மாற்ற வேண்டும்.

வெறும் ஏட்டுக் கல்வியால் பயனில்லை. ஆண்களும் பெண்களும் வாழ்க்கை நோக்கத்தை உணர்ந்து, அதன்படி வாழக் கல்வி துணை செய்ய வேண்டும். கல்வி என்பது ஒரு நிலையில் நின்று விடுவதில்லை. அது வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வர வேண்டியது. கல்வியின் மூலமாகப் புதிய சமுதாயத்தை உருவாக்கிவிட முடியுமென்று காந்தியடிகள் நம்புகின்றார்.

நிறைவு

காந்தியப் பொருளாதாரம் காந்தியடிகள் சொன்ன கருத்துக்களோடு நிறைவு பெறுவதில்லை. அது வளர்கின்ற தத்துவம். டாக்டர் ஜே. சி. குமரப்பா, கிருபாளினி, ஸ்ரீமன் நாருயண், ஜெயப்பிரகாஷ் நாருயண் போன்ற காந்திய அறிஞர்களும், டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் போன்ற பொருளாதாரப் பேராசிரியர்களும் காந்தியப் பொருளாதாரத்தை விளக்கியுள்ளனர். விஞேபா பாவேயின் பூமிதான, கிராமதான நடவடிக்கைகள் காந்தியப் பொருளாதாரத்தை நடைமுறைக்குக் கொண்டு வருபவைகளாகவும், காந்தியப் பொருளா தாரத்தின் பரப்பை விரிவுபடுத்தக் கூடியவைகளாகவும் இருக்கின்றன.

காந்தியப் பொருளாதாரம் அறிவின் துணையால் அறிந்து கொள்ள மட்டும் அமைந்ததன்று. அது உணர்ந்து, புரிந்து செயல்படுத்த வேண்டிய தத்துவம். இதனை உணர்பவர்கள் நம்புபவர்களாக மாறி, தங்களது வாழ்க்கையில் பின்பற்றிஞல் சமுதாயத்தில் வியத்தகு மாற்றம் ஏற்படும்.

இருக்கின்ற பொருளாதாரத்தை விளக்குவதல்ல காந்தியம். புதிய பொருளாதார அமைப்பை உருவாக்க எழுந்ததே காந்தியம். சிந்தனையின் விளைவு செயலாக மலர வேண்டும். சர்வோதய சமுதாயம் அமைய வேண்டும்.

துணை நூற்கள்

Sarvodaya — M. K. Gandhi

Cent Per Cent Swadeshi — M. K. Gandhi

Hind Swaraj — M.K. Gandhi

Economic and Industrial Life and Relations — M. K. Gandhi

Basic Education — M. K. Gandhi

From Yarvada Mandir — M. K. Gandhi

Rebuilding Our Village — M. K. Gandhi

The Gandhian Economy and Other Essays — J. C. Kumarappa

Gandhian Economic Thought — J. C. Kumarappa

The Gandhian Way of Life J. C. Kumarappa

Why the Village Movement — J. C. Kumarappa

The Gandhian Way — Acharya J. B. Kriplani

A Philosophy of Indian Economic Development — Richard B. Gregg

Planning for Basic National Recovery — M. P. Desai

A Critical Study of Gandhian Economic Thought — Shiva Nand Jha

Gandhian Theory and Practice — Social Inspect and Contemporary Relevance — The Indian Institute of Advanced Study

The Gandhian Alternative to Western Socialism — V. K. R. V. Rao

The Economic Philosophy of Mahatma Gandhi — Dr. Shanti S. Gupta

Economy of Permanence — J. C. Kumarappa

Capitalism, Socialism and Villagism — Bharatan Kumarappa

Essays on Gandhian Economics — J. S. Mathur

வைகை மதுரை